DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 361/ 2023
Deposition of PW7/ LW12

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி . மலர்விழி |
| Father's / Husband Name | : | ஜெயகுமார் |
| Village | : | தேனி |
| Taluk | : | தேனி |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.06.2026.
A1,A4,A9 எதிரிகள் இறப்பு. A4,A14,A15,A17,A19 எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

நான் தற்போது பொருதார குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 25.04.2016 தேதி 14.30 மணிக்கு நான் தேனி மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிபு சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் CRLOP (MD) 3843 /2016 dated 18.03.2016 படியான உத்தரவின் பேரில் தேனி மாவட்ட ஆண்டிபட்டி வட்டம் உப்புத்துரை மேற்கு தெருவில் வாசிக்கும் பெரியசாமி மகன் செல்வராஜ் என்பவர் பதிவு தபாலில் அனுப்பிய புகார் மனுவை பார்வையிட்டு எனது உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் தேனி மாவட்ட குற்றபிரிவு ( நிலஅபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு ) குற்ற எண் 15/ 2016 பிரிவுகள் 120 (b),465,468,471, 420,294(b),501(2) இதச வின் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 23)** அசலை வாதியின் புகார் மனுவுடன் இணைந்து தேனி நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்ற நீதித்துறை அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன் இவ்வழக்கில் புகார்தார் சாட்சி செல்வராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் 17.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான

உப்புத்துறை கிராமம் சர்வே எண். 116 /J இடத்தில் சென்று பார்வை மகஜர் சாட்சிகளான மயில்ராஜ் மற்றும் முத்தையன் முன்பு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 24 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 25** பின்பு அதே இடத்தில் மகஜர் சாட்சிகள் மயில் ராஜ் மற்றும் முத்தையன் அவர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் 1.லட்சுமி, 2. மாரியப்பன், 3. ராமமூர்த்தி, 4. சக்திவேல் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 04.05.2016 இவ்வழக்கின் 1வது எதிரி ஓச்சத்தேவர் 2வது எதிரி ரவி ஆகியோர்கள் தேனி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சென்றுள்ளார்கள். 29.06.2016 தேதி இவ்வழக்கில் சம்மந்தபட்ட 19 ஆவணங்களையும் சான்று ஒப்பமிட்ட நகல் வேண்டி கடமலைகுண்டு சார் பதிவாளர் அவர்களுக்கு கடிதம் வைத்தேன். 04.07.2016 தேதி கடமலைகுண்டு சார் பதிவாளர் திரு. பாலமுருகன் என்பவரை விசாரனை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கடமலைக்குண்டு கிராம சர்வே எண். 1116 / 1J இடத்திற்கான 19 சான்றொப்பமிட்ட நகல்களை பெற்றறேன். 03.08.2016 தேதி இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய கடமலைக்குண்டு கிராம சர்வே எண். 1116 / 1J இடத்திற்கு அ பதிவேடு , அடக்கல், சிட்டா , FMB வரைபடம் கேட்டு கடமலைகுண்டு கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு கடிதம் வைத்தேன். அன்றைய தினம் ஆண்டிபட்டி வட்டாச்சியர் அவர்களுக்கு மேற்படி இடம் தொடர்பான கணினி பட்டா, நில அளவை செய்யப்பட்ட நில அளவை அறிக்கை ஆகியவற்றை கேட்டு கடிதம் வைத்தேன். 04.09.2016 தேதி ஆண்டிபட்டி வட்டாச்சியர் திரு. சுந்தர்லால் அவர்களை சந்தித்து மேற்படி நிலத்திற்கான பட்டா மற்றும் நில அளவை அறிக்கை ஆகியவற்றின் சான்றொப்பமிட்ட நகல்களை பெற்று அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். **புல எண் 1116/1 J சம்பந்தமாக வட்டாச்சியர் கொடுத்த கடிதங்கள் உடன் புல எண் 1116/1J2, 1J1 என்பதற்காக கொடுத்த கணினி பட்டா மற்றும் வரைபடம் ஆகியவை அ.சா.ஆ.26(** 1 முதல் 6 தாள்கள் ). 24.09.2016 தேதி நான் காவல் ஆய்வாளராக பதவி உயர்வு பெற்று சென்றதால் இவ்வழக்கு கோப்பினை நில அபகரிப்பு பிரிவு ஆய்வாளர் திரு. சரவண தெய்வேந்திரன் அவர்களிடம் ஒப்படைத்து சென்றேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

புகார்தாரர் மதுரை உயர் நீதிமன்ற கிளையை நாடுவதற்கு முன்பே 10.08.2016 தேதி புகார் கொடுத்துள்ளார் என்றால் நான் அந்தசமயத்தில் பணியில் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு நேரில் சென்றேனா என்றால்

சென்றேன். இவ்வழக்கில் பதிவுத்துறை ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் எனது விசாரனையின் போது சமர்பிக்கவில்லை. நான் புகாரை பெற்று நான் சம்பவ இடத்திற்கு சென்று இவ்வழக்கின் இவ்வழக்கில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஊருட்டு கட்டையோ ஆயுதங்களையோ கைப்பற்றினேனா என்றால் காலதாமதம் ஆனதால் கைப்பற்றவில்லை. இந்த புகார் சொந்தானது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் கடமலைகுண்டு கிராம சர்வே எண். 1116/ 1J ஆகும். இவ்வழக்கு சொத்தின் சர்வே எண்ணனது சர்வே எண். 1116/1J 2 என்பதே உண்மை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தின் விஸ்தீரனம் தெரியுமா என்றால் 1 ஏக்கர் 80 சென்ட். புகார்தாருக்கு பாத்தியப்பட்ட சொத்து 1 ஏக்கர் 27 சென்ட் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு வருவாய்த்துறை மற்றும் பதிவுத்துறை உள்ளடக்கிய வழக்கு என்பதால் அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை ஏதும் கேட்டேனா என்றால் ஆரம்பகட்ட விசாரணை என்பதால் கேட்கவில்லை. வழக்கு சொத்திற்கு பாதை எங்கு உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் வழக்கு சொத்தின் வடக்கு ,கிழக்கு, தெற்கு மூன்று புறத்திலும் பாதை அமைத்துள்ளது. மேற்படி வழக்கு சொத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் மட்டுமே பாதை உள்ளது என்றும் நீங்கள் நேரில் ஆய்வு செய்திருந்தால் சரியான பாதையை சொல்லியிருப்பீர்கள் என்றால் தாவா சொத்தில் தென் பகுதியில் 10 அடி அகல பாதைவிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்க சொத்தில் மத்திய அரசின் திட்டத்தின் கீழ் வீடுயில்லா நபர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் முன்னிலையில் வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு கிடைத்த ஆவணங்களின் அடிப்படையில் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 2 ம் சாட்சியான மாரியப்பன் மனநிலைகுன்றியவர் என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகள் அனைவரையும் சரியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவ இடத்திற்கு செல்லவும் இல்லை சாட்சிகளை முறைப்படி விசாரிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி புகார்தாரர் மற்றும் எதிரிகளுக்கு நட்பும் உறவுமுறையும் இருந்தது என்றால் இருந்திருக்கலாம்.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.06.12 16:45:58 +0530

Judicial Magistrate,
Andipatti.